## திறன்கள் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - ஐடிஏ - 2015

திறன்கள் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 செப்தம்பர் 12 ஆம் திகதிய 5516 எல்கே மற்றும் 5517 எல்கே ஆம் இலக்க நிதியிடல் உடன்படிக்கைகளின் 2 ஆம் பட்டோலையின் II.பீ.3 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### 1.2 நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

நிகழ்ச்சித்திட்ட அமுலாக்கல் ஆவணத்தின் பிரகாரம், முன்னாள் இளைஞர் விவகாரங்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சாகவிருந்த தற்போதைய திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சு நிகழ்ச்சித்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன், திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சின் கீழுள்ள ஏனைய 09 நிறுவனங்கள் நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாக உள்ளன. நிகழ்ச்சித்திட்ட அமுலாக்கல் ஆவணத்தின் பிரகாரம், 2020 ஆம் ஆண்டளவில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஊழியர் சந்தை கேள்வியை எதிர்கொள்வதற்கு வினைத்திறனான கல்வி முறைமையை கட்டியெழுப்புதல் மற்றும் தொழிற்கல்வி பயிற்சி மற்றும் ஆதரவான கொள்கைகள், முறைமைகள் மற்றும் கட்டமைப்புகள் போன்றவற்றின் தரம், பொருத்தத்தன்மை, அணுகுதல், இனங்காணல் போன்றவற்றை மேம்படுத்துதல் என்பன நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்களாகும். நிகழ்ச்சித்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 125,916 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 961.2 மில்லியனானதுடன் அதில் ரூபா 13,100 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொலர் 100 மில்லியன் ஒவ்வொன்றும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தினாலும் ஆசிய அபிவிருத்தி வங்கியினாலும் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டிருந்தது. மேலும், ரூபா 5,423 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 41.40 மில்லியன் ஜேர்மனி அரசாங்கம் மற்றும் கொரியா ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வங்கி ஆகியவற்றால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக, ரூபா 26,200 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 200 ஏனைய மூலங்கள் ஊடாக நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. இவ் அறிக்கையானது சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தின் கடன் பெறுகைகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மீதான கருத்துரைகளை கொண்டுள்ளது. நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகள் 2014 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2020 ஆம் ஆண்டளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது.

### 1.3 ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இவ் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்த ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும்

கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிகழ்ச்சித்திட்டத்தின் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி நிகழ்ச்சித்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) நிகழ்ச்சித்திட்டத்தினுடைய ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் நிகழ்ச்சித்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சு மற்றும் தொழில்நுட்ப கல்வித் திணைக்களம் மற்றும் எட்டு பகுதியளவிலான தன்னாட்சி நிறுவனங்களிற்கான செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம், நிகழ்ச்சித்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடன்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் நிதியளித்தல் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடன்களின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன தொழிற்பயிற்சித் துறையின் 10 நிறுவனங்களின் நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஏ) நிதியளித்தல் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையில் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் பந்தி 2.2 இல் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கங்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) நிகழ்ச்சித்திட்டமானது 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிகழ்ச்சித்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஈ) நிதியளித்தல் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதி உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்

### 2.2 ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடு

03 பல்கலைக்கழகக் கல்லூரிகளின் நிர்மாண வேலைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ரூபா 32.93 மில்லியன் தொகையான முற்பணக் கொடுப்பனவுகள் நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறை வேலையாக காட்டப்பட்டிருந்தது.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் 2015 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | நிதியளித்தல் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | 2015 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | 2015 திசெம்பர் 31 வரை பயன்படுத்தப்பட்ட நிதிகள் | |
|---|---|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஏடிபீ | 100.00 | 13,100.00 | | 56.65 | 7,670.00 |
| ஐடிஏ | 100.00 | 13,100.00 | | 6.51 | 871.36 |
| இலங்கை அரசாங்கம் | 519.80 | 68,093.00 | | | |
| ஜேர்மனி அரசாங்கம் | 15.40 | 2,017.00 | 5,089.00 | | |
| கொரியா ஏற்றுமதி இறக்குமதி வங்கி | 26.00 | 3,406.00 | | | |
| ஏனையவை | 200.00 | 26,200.00 | | | |
| | 961.20 | 125,916.00 | 5,089.00 | 63.16 | 8,541.36 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்காக ரூபா 5,089 மில்லியன் தொகையான பாதீட்டு ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டபோதும் ஒதுக்கீட்டின் 61 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 3,103 மில்லியன் தொகை மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக, மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 598.6 மில்லியன் தொகையில் கடப்பாடுகள் தீர்வு செய்யப்படாதிருந்தது.

(ஆ) நிகழ்ச்சித்திட்ட மதிப்பீட்டு ஆவணங்களின் பணவளிப்பு பட்டியல்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியில் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திடமிருந்து ரூபா 4,087.20 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 31.20 மில்லியன் மீள்நிரப்பப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 871.36 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 6.51 மில்லியன் மாத்திரமே மீள்நிரப்பப்பட்டிருந்தது.

(இ) திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சின் செயலாளருக்கு முகவரியிடப்பட்ட சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தின் 2015 யூலை 15 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம், ஐ.அ.டொலர் 6.58 மில்லியனிற்கு சமமான எஸ்டிஆர் 4.68 மில்லியன் பொதுத் திறைசேரிக்கு மாற்றம் செய்யப்பட்டிருந்த போதிலும் பொதுத் திறைசேரியிடமிருந்து பெறப்பட்ட தகவல்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டத்தின் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் என்பவற்றின் பிரகாரம், ஐ.அ.டொலர் 6.51 மில்லியன் மாத்திரமே அனுப்பப்பட்டிருந்தது.

### 3.2 பௌதீக முன்னேற்றம்

ஒவ்வொரு அமுலாக்கல் முகவராலும் தனியான செயல்நடவடிக்கைத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருந்த போதிலும் செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தில் நிர்ணயிக்கப்பட்ட நடவடிக்கைகளை மேவுகை செய்வதற்கும் நிகழ்ச்சித்திட்டக் காலப்பகுதியின் போது ரூபா 125,916 மில்லியன் தொகையான மொத்த ஒதுக்கீட்டைப் பயன்படுத்துவதற்கும்

நிகழ்ச்சித்திட்டத்திற்கான விரிவான விபரமான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. ஆதலால், நிகழ்ச்சித் திட்டக் காலப்பகுதியின் இறுதியில் பொதுவான இலக்கினை அடைந்து கொள்வதற்கு நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களை ஒழுங்கமைப்பதற்கான முறையான நுட்பமுறையொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை என இது குறிப்பிட்டுள்ளது. அவற்றின் மீது பின்வரும் மேலதிக அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயன்முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது ரூபா 1,573.16 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் அமுல்படுத்த வேண்டிய 06 நிகழ்ச்சித்திட்டங்களில் ரூபா 547.33 மில்லியன் கிரயத்தில் 02 நிகழ்ச்சித்திட்டங்களை திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சு அமுல்படுத்தியிருந்தது. மேலும், 24 நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு ரூபா 28.51 மில்லியன் தொகை மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவிற்கு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது 07 நிகழ்ச்சித்திட்டங்களை மாத்திரம் அமுல்படுத்துவதற்கு ரூபா 25.6 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) 08 நிகழ்ச்சித்திட்டங்களை பூர்த்தி செய்வதற்கு அவற்றின் மீது ரூபா 174.10 மில்லியன் தொகையான ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை ரூபா 101.87 மில்லியன் தொகையை மாத்திரம் செலவழித்திருந்தது. மேலும், மீளாய்வாண்டின் போது 04 நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு ரூபா 83.41 மில்லியன் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் கடற்தொழில் மற்றும் கடற் பொறியியல் தேசிய நிறுவகம் 03 நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு ரூபா 30.15 மில்லியன் தொகையை செலவழித்திருந்தது. ஆதலால், உரிய நடவடிக்கைகளுக்கான நிதிகளின் உண்மையான தேவைப்பாடுகள் தொடர்பாக விபரமான ஆய்வுகள் மேற்கொள்ளப்படாமல் மேற்குறிப்பிடப்பட்ட நிறுவனங்களின் கீழ் நிகழ்ச்சித்திட்டங்களுக்கான ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருந்ததை இது சுட்டிக்காட்டியுள்ளது.

(இ) சர்வதேச அபிவிருத்திச் சங்கத்துடன் கைச்சாத்திடப்பட்ட நிதியளித்தல் உடன்படிக்கையின் பணவளிப்பு இணைப்புக் குறிகாட்டி – 03 இன் பிரகாரம், அமுல்படுத்தல் முகவர்களின் முன்னுரிமை பிரதேசங்களிற்கான கல்விசார் பதவியணிக்கான பதவியணியினரை தீர்மானிப்பதற்கு மனிதவள கொள்கையொன்றை தயாரிப்பதற்கும் அதன் மீதான ஆட்சேர்ப்புத்திட்டத்திற்கும் திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். எனினும், தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம், மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு, தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை, தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், இலங்கை – ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம் மற்றும் கடற்தொழில் மற்றும் கடற் பொறியியல் தேசிய நிறுவகம் ஆகியவற்றுக்கான புதிய ஆட்சேர்ப்புக் கொள்கைகள் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் கூட தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், அமுலாக்கல் முகவர்களிலுள்ள விரிவுரையாளர்கள் மற்றும் பயிற்றுவிப்பாளர்களின் 4,039 பதவிகளின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 1,337 பதவிகள் நிரப்பப்படாதிருந்தது.

(ஈ) நிகழ்ச்சித்திட்ட அமுல்படுத்தல் ஆவணத்தின் பிரகாரம், இலங்கையிலுள்ள தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சிகளின் தரம் மற்றும் அங்கீகாரத்தை முன்னேற்றுதல் நிகழ்ச்சித்திட்டத்தின் இறுதி விளைவாக இருக்க வேண்டும். ஆகையால், தொழிற்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களால் தற்போது நடாத்தப்படும் கல்விக் கற்கைநெறிகளை மீளாய்வு செய்வதற்கும் நாட்டின் தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சிகளிற்கான சர்வதேச அங்கீகாரத்தை உறுதிப்படுத்தும் வகையில் தேசிய தொழிற்கல்வி தகைமை (என்வீகியூ) மட்டம் வரை பாடக் கற்கைநெறிகளை முன்னேற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், 08 அமுலாக்கல் முகவர்களினால் தற்போது நடாத்தப்படும் 3,732 பாடக் கற்கைநெறிகளில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் கூட தேசிய தொழிற்கல்வி

தகைமை மட்டம் வரை 2,532 பாடக் கற்கைநெறிகள் மாத்திரம் பதிவுசெய்யப்பட்டிருந்தன.

(உ) நிகழ்ச்சித்திட்ட அமுல்படுத்தல் ஆவணத்தின் பிரகாரம், தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வித் துறையின் வேலைவாய்ப்பு மட்டத்தினை அதிகரிப்பதற்கு தனியார் – பொது பங்குடமைகளுடன் 05 பல்கலைக்கழக கல்லூரிகளை ஸ்தாபிப்பதற்கான நடவடிக்கையை எடுப்பதற்கு திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சு வேண்டப்பட்டுள்ள போதிலும் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தனியார் – பொது பங்குடமை முறையில் 03 பல்கலைக்கழக கல்லூரிகள் மாத்திரமே ஸ்தாபிக்கப்பட்டிருந்தன.

(ஊ) நிகழ்ச்சித்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் பிரகாரம், தொழிற்கல்வித் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் கீழ் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 14 ஏனைய பல்கலைக்கழக கல்லூரிகளை ஸ்தாபிப்பதற்கும் தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சிகளிற்கான மாணவர்களின் உட்சேர்ப்பினை அதிகரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். 06 பல்கலைக்கழக கல்லூரிகளின் கட்டிட நிர்மாண வேலைகள் பூர்த்தியடைந்திருந்த போதிலும் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 05 அத்தகைய பல்கலைக்கழக கல்லூரிகளின் கல்விசார் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டிருந்தது. அத்தகைய பல்கலைக்கழக கல்லூரிகளின் செயற்பாடுகள் மீது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பட்டன்கலவிலுள்ள பல்கலைக்கழக கல்லூரியின் கல்விசார் நடவடிக்கைகள் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் கூட ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், பல்கலைக்கழக கல்லூரியின் கல்விசார் நடவடிக்கைகள் ஆரம்பிப்பதிலுள்ள காலதாமதங்கள் காரணமாக பல்வேறு தரங்களிலுள்ள 18 பதவியணி உறுப்பினர்கள் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பல்கலைக்கழக கல்லூரிகளில் ஒரு வருடத்திற்கு மேலாக விளைவற்றிருந்தனர். மீளாய்வாண்டின் போது அவர்களுக்கு ரூபா 4.99 மில்லியன் தொகையான ஊதியங்களும் வழங்கப்பட்டிருந்தன.

(ii) மேலே குறிப்பிடப்பட்ட 05 பல்கலைக்கழக கல்லூரிகளில் 51 பாடக் கற்கைநெறிகளுக்காக 1260 மாணவர்களை அனுமதிப்பதற்கு வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருந்த போதிலும், 42 பாடக் கற்கைநெறிகளுக்காக மீளாய்வாண்டின் போது 487 மாணவர்களை மாத்திரம் அனுமதிக்க முடிந்திருந்ததுடன் அவற்றில் 146 மாணவர்கள் மீளாய்வாண்டின் போது கற்கைநெறியிலிருந்து இடைவிலகியிருந்தனர்.

(iii) மேலும், 40 விரிவுரையாளர்கள், 15 பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் 11 ஆய்வுகூட உதவியாளர்களின் பதவிகள் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 05 பல்கலைக்கழக கல்லூரிகளில் வெற்றிடமாக இருந்தது.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.4.1 ஆம் பந்தி மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசு என்பவற்றின் பிரகாரம் தேசிய போட்டிக் கேள்வி நடைமுறையை பிரயோகிக்காமல் கடை முறைமையின் கீழ் மீளாய்வாண்டின் போது ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக கலலூரிக்கு ரூபா 5.51 மில்லியன் பெறுமதியான உபகரணங்களை திறன்கள் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்ட அலகு கொள்வனவு செய்திருந்தது. மேலும், 2014 திசெம்பர் 23 ஆம் திகதி ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்தம் வழங்கிய திகதியின் 10 மாதங்களின் பின்னர் 2015 ஒக்தோபர் 21 ஆம் திகதியே ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக, அவ் உபகரணங்கள் தர உறுதிப்பாட்டு நோக்கங்களிற்கான பரீட்சிப்பும் அதிகாரமும் இன்றி செய்முறைப் பயிற்சி நோக்கங்களிற்காக பயன்படுத்தப்பட்டிருந்தன.

### 3.4 விளைவற்ற/ குறைவாக பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உரிய நேரத்தில் உரிய பயிற்சிக் கற்கைநெறிகள் ஆரம்பிக்கப்பட்டிராமையால் தொழிற்கல்வித் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் கீழ் செயற்படுத்தப்பட்ட கட்டுப்பெத்த, இரத்மலானை, பற்றன்ஹல மற்றும் குளியாப்பிட்டிய பல்கலைக்கழக கல்லூரிகளில் ரூபா 210.32 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட பயிற்சி உபகரணங்கள் ஒரு வருடத்திற்கு மேலாக விளைவற்றிருந்தமை அவதானிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மேலும், ஆய்வுகூடங்கள், தண்ணீர், மின்சாரம் போன்ற ஏனைய வசதிகளின் பற்றாக்குறை காரணமாக தொழிற்கல்வித் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் கீழ் செயற்படுத்தப்பட்ட மாத்தறை, இரத்மலானை மற்றும் குளியாப்பிட்டிய பல்கலைக்கழக கல்லூரிகளில் ரூபா 424.33 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட ஏனைய பயிற்சி உபகரணங்கள் ஒரு வருடத்திற்கு மேலாக குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது

### 3.5 நிதிக் கட்டுப்பாடுகள் மீதான சர்ச்சைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிகழ்ச்சித்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் 24 ஆம் பந்தியின் பிரகாரம், திறன்கள் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிறுவனங்களின் உள்ளக கணக்காய்வுப் பிரிவுகள் ஆபத்தை அடிப்படையாக கொண்ட உயர் தாக்கம் செலுத்தும் கணக்காய்வுகளை மேற்கொள்ள வேண்டியதுடன் நிகழ்ச்சித் திட்டத்தின் மேலதிக செயலாளர் அதற்கமைய கண்காணிப்பு நோக்கங்களிற்காக நடவடிக்கை எடுப்பதற்கு வேண்டப்பட்டுள்ளார். உள்ளக கணக்காய்வு பிரிவுகள் வரிசை அமைச்சிலும் ஏனைய அமுல்படுத்தல் முகவர்களினாலும் ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன் 56 கணக்காய்வாளர்கள் வேலையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர் என அவதானிக்கப்பட்டிருந்தது. எனினும் 05 அமுல்படுத்தல் முகவர்களில் நிகழ்ச்சித்திட்டத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் உள்ளகக் கணக்காய்விற்குட்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், ஏனைய அமுல்படுத்தல் முகவர்களின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுகளின் விபரமான நடவடிக்கைத் திட்டங்களின் பிரகாரம், பணவளிப்பு இணைப்பு குறிகாட்டிகளை அடிப்படையாக கொண்டு ஆபத்தை அடிப்படையாக கொண்ட உயர் தாக்கம் செலுத்தும் கணக்காய்வுகளை திட்டமிடுவதற்கும் மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சின் 2014 மே 19 ஆம் திகதிய 4-1/2/1/17 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் பயிற்சி மற்றும் ஏனைய பதவியணியினருக்காக ஊக்குவிப்புத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அவற்றின் மீது ரூபா 138.13 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் நிகழ்ச்சித்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்ளும் வரிசையில் ஊக்குவிப்புத் திட்டத்திற்கான மதிப்பீட்டிற்கான நிபந்தனைகளையும் பொறிமுறைகளையும் அமுல்படுத்தல் முகவர்கள் பின்பற்றியிருக்கவில்லை.

### 3.6 வழமைக்கு மாறான நடவடிக்கைகள்

கடன் பெறுகைகளில் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவால் மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்ட ரூபா 2.56 மில்லியன் தொகை நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நேரடியாக தொடர்புபட்டிருக்கவில்லை.

**3.7 முன்னைய கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட தீர்க்கப்படாத கணக்காய்வு விடயங்கள்**

---

கிரய மதிப்பீடு தயாரிக்காமலும் ஒரே தன்மையுடைய உருப்படிகளை தொகுதிப்படுத்தாமலும் உற்பத்தி தொழில்நுட்ப கற்கைநெறிக்காக ரூபா 186 மில்லியன் கிரயத்தில் பயிற்சி மூலப்பொருட்களை கொள்வனவு செய்வதற்கு 2014 ஆம் ஆண்டில் கேள்விகள் கோரப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது. இதன் விளைவாக, கேள்விதாரர் கூறுவிலைகள் கோரப்பட்ட 97 உருப்படிகளில் 35 உருப்படிகளிற்காக விலைமனுக்களை சமர்ப்பித்திருக்கவில்லை. தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவும் கொள்வனவுக் குழுவும் விலைமனு சமர்ப்பிக்கப்படாத உருப்படிகளுக்காக கூறுவிலைகளை மீள கோருவதற்கு கட்டளையிட்டிருந்த போதிலும் திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சின் திறன்கள் துறை அபிவிருத்திப் பிரிவு 2016 மே 31 இல் உள்ளவாறும் கூட அவற்றை மீள கோருவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.